**Dated : 13.07.2026** (நேரம் : மதியம் 12.05 மணி)

**MC. No: 16/2025**

**ம.சா. 1 திருமதி.முகிலா தேவி க/பெ. கணேஷ் குமார்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு அனுமதியின் பேரில் மனுதாரர் தரப்பில் கூடுதலாக முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**கூடுதல் முதல் விசாரணை –**

எங்கள் திருமண பத்திரிக்கை **ம.சா.ஆ.3.** மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை –**

நான் 12 ம் வகுப்பு படித்திருக்கிறேன். இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சேர்ந்து வாழவேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் என் வழக்கறிஞர் சொல்லிய தகவல்கள் தான். எனக்கும்,. எதிர்மனுதாரருக்கும் 25.05.2016 ம் தேதி ரெகுநாதபுரத்தில் உள்ள ஒரு திருமண மஹாலில் வைத்து திருமணம் நடந்தது. திருமண சமயம் எதிர்மனுதாரருக்கு ஒரு செயின் மற்றும் ஒரு மோதிரம் ஆகியவை 2 பவுனுக்கு எங்கள் வீட்டிலிருந்து அணிவித்தோம். திருமணத்திற்கு பிறகு எனக்கு 2 ம் மனுதாரர் பிறந்தார். அந்த குழந்தையை எதிர்மனுதாரர் அன்புடனும், பாசத்துடனும் நடந்து கொண்டு பராமரித்தார் என்றால் சரியல்ல. வெளிநாட்டில் இருந்து வந்தால் மட்டும் குழந்தையை எதிர்மனுதாரர் பார்ப்பார். பொதுவாக வெளிநாட்டிற்கு செல்பவர்கள் வருடத்தில் ஒரு மாதம் மட்டும் லீவுக்கு ஊருக்கு வருவார்கள். அந்த சமயத்தில் தான் அவர்கள் குடும்பம் மற்றும் குழந்தைகளை பார்ப்பார்கள். எதிர்மனுதாரரின் தாயார் வீட்டில் மாடியில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்து முதல் தளம் வீடு அமைத்து தருமாறு நான் என் கணவரிடம் கேட்டேன் என்றால் சரியல்ல, தனியாக வாடகை வீடு பிடித்து தனிக்குடித்தனம் வைக்குமாறு கேட்டேன்.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.13 17:21:20 +0530

மாடியில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்து முதல் தளம் கட்ட எதிர்மனுதாரர் அவரது அம்மாவிடமும், சகோதரியிடமும் கடன் வாங்கியிருந்தார் என்றால் அவர்களிடமும் கடன் வாங்கியிருந்தார், நானும் 4 பவுன் நகை கொடுத்தேன். என் அப்பா இறந்து 5 வருடம் ஆகிறது. என் தந்தை இறந்த சமயத்தில் என் கணவர் வெளிநாட்டில் இருந்தார். அதற்கு இரங்கல் தெரிவிக்க எதிர்மனுதாரரின் தாயார் எங்கள் வீட்டிற்கு வந்தபோது நாங்கள் அவரை அசிங்கமாக பேசி, திட்டி, அவமானப்படுத்தினோம் என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வாறு என் மாமியாரை அவமானப்படுத்தி அனுப்பினோம் என்றும், வழக்கிற்காக அதனை பொய்யாக மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. குடும்பத்தில் சாதாரணமாக கணவன் மனைவிக்கு இடையே சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படுவது வழக்கம் என்றால் சரிதான். நான் சின்ன சின்ன விஷயங்களுக்கு எல்லாம் கோவித்துக்கொண்டு அம்மா வீட்டிற்கு செல்வதும், காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதும், ஊர் மத்தியில் புகார் கொடுப்பதும், கையை அறுத்து தற்கொலை செய்துகொள்வேன் என்று மிரட்டுவதும் ஆகியவற்றை வாடிக்கையாக கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய கணவர் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானார் என்றும், நான் வழக்கிற்காக அதனை மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு நான் ஒருகடையில் வேலை பார்த்தேன். திருமணத்திற்கு பிறகு நான் வேலை பார்க்கவில்லை. என் கணவருக்கு வீடு இருப்பதாகவும், அவர் சம்பாதிப்பதாகவும் காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் வெளிநாட்டில் வேலையை விட்டு சுமார் 2 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். அவர் வெளிநாட்டில் வேலை பார்த்தபோது அவருடைய மாத வருமானம் ரூ.20,000/– என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவரது வருமானம் பற்றி அவர் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்தபோது சம்பாதித்த ரூ.20,000/– பணத்தில்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.13 17:21:29 +0530

தான் தனது தேவைக்கு எடுத்துக்கொண்டு, மீதி பணத்தை எனக்கு அனுப்பினார் என்றால் சரியல்ல, அவர் எனக்கு எந்த பணமும் அனுப்பவில்லை. எதிர்மனுதாரர் தற்போது சென்னையில் ஒரு டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் தினக்கூலியாக வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவரது மாதம் வருமானம் சுமார் ரூ.10,000/– இருக்கும் என்றால் அதுபற்றி அவர் என்னிடம் சொல்லவில்லை. அந்த தொகையில் இருந்து தான் அவர் எனக்கும், எனது குழந்தைக்கும் பராமரிப்பிற்காக மாதந்தோறும் ரூ.3,000/– வீதம் அனுப்பினார் என்றால் 10 மாதத்திற்கு முன்புவரை அந்த தொகை அனுப்பினார் தற்போது அவர் எனக்கு பணம் எதுவும் அனுப்பவில்லை. எனக்கும், என் குழந்தைக்கும் தேவையான எல்லாவற்றையும் எதிர்மனுதாரர் செய்து வருகிறார் என்றும், வழக்கிற்காக நான் அதனை பொய்யாக அதனை மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது அப்பா மற்றும் அம்மா இருவரையும் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் வயதானவர்கள் என்றும் அவர்களுக்கு மருந்து, மாத்திரைகள் வாங்குவதற்கான செலவுகள் இருக்கும் என்றால் அவர்கள் இருவரும் கூலி வேலைக்கு போகிறார்கள். 07.04.2024 ம் தேதி எனது பெரியப்பா மகன் முனீஸ்வரன் என்பவரை வரவழைத்து என் கணவரை அடிக்க சொல்லி அவரும் என் கணவரை அடித்தார் என்றால் சரிதான். அதனால் என் கணவர் மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல, ஆனால் என் கணவர் என்னை அடித்துவிட்டு எங்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்வதற்காக அவராகவே மருத்துவமனையில் போய் சேர்ந்துகொண்டார். இது சம்பந்தமாக போலீசார் எங்களை விசாரித்து அவர்கள் சொன்னதன் பேரில் இருவரும் சமாதானமாக சென்றுவிட்டோம். என் கணவர் ஓட்டுநராகவும், தினக்கூலியாகவும், எந்தவித நிரந்தர வேலையும் இல்லாமல் இருப்பதால் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்கக்கூடிய வசதி அவருக்கு இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எங்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்க

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.13 17:21:35 +0530

கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. ஜீவனாம்சம் வழக்கிற்கு சம்பந்தமில்லாத விபரங்களை நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.13 17:21:41 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.